குமாரபாளையத்தில் அண்ணா திமுக 'பூத்' கமிட்டி ஆலோசனை கூட்டம்: முன்னாள் அமைச்சர் தங்கமணி பங்கேற்பு

குமாரபாளையம், ஏப். 3–

குமாரபாளையத்தில் நடைபெற்ற அண்ணா திமுக பூத் கமிட்டி ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் தங்கமணி பங்கேற்று பேசினார்.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அண்ணா திமுக பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம் நகரச் செயலாளர் பாலசுப்பிரமணி தலைமையில் எதிர்மேடு எஸ்எஸ்எம் சமூக கூடத்தில் நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி எம்எல்ஏ, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் கள்ளக்குறிச்சி முன்னாள் எம்எல்ஏ பிரபு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று பேசினர்.

அப்போது முன்னாள் அமைச்சர் தங்கமணி பேசியதாவது:–

தற்போது பூத் கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள பெண்கள் வீடு வீடாக சென்று அண்ணா திமுக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லி அண்ணா திமுக வெற்றி பெற வாக்களிக்க கேட்டுக்கொள்ள வேண்டும்.

இதே போல பூத் கமிட்டியில் உள்ள ஆண்களும் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று வீட்டில் உள்ள நபர்கள் குறித்து அறிந்து, அதில் யாராவது வெளியூரில் இருந்தால் அவரை வரவழைத்து நமக்கு வாக்களிக்க வைக்க வேண்டும். அண்ணா திமுக ஆட்சி அமைய நீங்கள் அயராது பாடுபட வேண்டும். புதைவட மின்பாதை பணிகள் நடந்து வந்த நிலையில் ஆட்சி மாற்றம் வந்தது. அதனால் அந்தப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டன.

மீண்டும் அண்ணா திமுக ஆட்சி அமைந்ததும் மீண்டும் பணிகளை துவங்கி முழுமையாக செய்து முடிக்கப்படும். இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கமணி பேசினார்.

பூத்திற்கு 9 பேர் வீதம் 69 பூத்துகள் அமைக்கப்பட்டன. இதில் ஒவ்வொரு பூத்திலும் 6 ஆண்கள், 3 பெண்கள் என்ற வகையில் பூத் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் நகராட்சி உறுப்பினர்கள் பழனிசாமி, புருஷோத்தமன், நகரத் துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, நகர பொருளாளர் பாஸ்கரன், அம்மா பேரவை செயலாளர் அர்ஜுனன் மற்றும் ரவி உள்பட நகர நிர்வாகிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.



கேபிஆர் பொறியியல் கல்லூரியில் தேயிலை விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோவை, ஏப். 3–

கேபிஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், "தென்னிந்திய டீ" என்ற தலைப்பில் ஒரு சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் ஆதரவுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக இந்திய தேயிலை வாரியத்தின் ஆராய்ச்சி இயக்குநர் மகிபால்சிங், கௌரவ விருந்தினராக கிரிஸ்டல் இந்தியா டீ நிர்வாக இயக்குனர் தீபக் ஷா, கோயம்புத்தூர் தேயிலை வர்த்தக சங்கத்தின் தலைவர் கிரிஷ் நாயர் மற்றும் இந்திய தேயிலை கழகம் மற்றும் பல்வேறு முன்னணி தேயிலை நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் சரவணன் தலைமை தாங்கினார்.

கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இந்திய தேயிலைகளின் பல்வேறு வகைகள், அவற்றின் தனித்துவமான பயன்பாடுகள், அவற்றில் உள்ள மருத்துவ குணங்கள், சத்துக்கள் மற்றும் சர்வதேச சந்தையில் உள்ள ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

குறிப்பாக, இந்திய தேயிலைகளின் தரம் மற்றும் அதன் மருத்துவ குணங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், தேயிலை உற்பத்தி மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகள் குறித்தும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தேயிலை தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வும் நடைபெற்றது. இதில் மாணவர்கள் தங்களது சந்தேகங்களையும் கேள்விகளையும் நிபுணர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய, இந்திய தேயிலை கழகத்தின் நிர்வாகிகள், இந்திய தேயிலைகளுக்கு சர்வதேச அளவில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதாகத் தெரிவித்தனர். குறிப்பாக, இந்தியாவில் அசாம் மற்றும் ஊட்டி போன்ற பகுதிகளில் விளைவிக்கப்படும் தேயிலைகள் வெளிநாடுகளில் அதிகளவு விரும்பப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மேலும், பிளாக் டீக்கு இருக்கும் அதே அளவு மருத்துவ குணங்களும் மதிப்பும் கிரீன் டீக்கும் இருப்பதாக தெரிவித்தனர்.

தருமபுரி கலெக்டர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி4 தேர்வில் தேர்ச்சி பெற்று, தருமபுரி வருவாய் அலகிற்கு தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்ட 9 பேருக்கு பணிநியன ஆணைகளை கலெக்டர் ரெ.சதீஸ் வழங்கினார். உடன் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) கவிதா, அலுவலக பொது மேலாளர் ராஜசேகர் ஆகியோர் உள்ளனர்.

குன்னூர் லாலி அரசு மருத்துவமனையில் புதுப்பிக்கப்பட்ட பெண் உள்நோயாளிகள் வார்டு: கலெக்டர் லட்சுமி பவ்யா திறந்தார்

நீலகிரி, ஏப். 3–

நீலகிரி மாவட்டம் குன்னூர் லாலி அரசு மருத்துவமனையில் ரூ.70 லட்சம் மதிப்பீட்டில் மைக்ரோலேண்ட் பவுண்டேசன் சார்பில் புதுப்பிக்கப்பட்ட பெண் உள்நோயாளிகளின் வார்டு பிரிவினை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்தார்.

பின்னர், அவர் தெரிவித்ததாவது:

மைக்ரோலேண்ட் பவுண்டேசன் சார்பில் மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்ட புதுப்பிக்கப்பட்ட இந்த உள்நோயாளிகள் வார்டு பிரிவில் காற்றோட்டம் மற்றும் ஒளியமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. கூரைத்தகடு பழுது பார்க்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளது.

ஜன்னல்கள் மற்றும் மின்சார அமைப்புகள் புதுப்பிக்கப்பட்டுள்ளது. நோயாளிகளுக்கான புதிய கட்டில்கள், நோயாளிகளின் பராமரிப்பாளர்களுக்கு தனித்துவமான இடங்கள் மேம்பாடுத்தப்பட்ட கழிப்பறை வசதிகள், சுடுநீர் வசதி மற்றும் செவிலியர்களுக்கான நவீன வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களின் நலன் கருதி மருத்துவமனையை புதுப்பிக்க நிதி வழங்கிய மைக்ரோலேண்ட் பவுண்டேசன் நிறுவனத்திற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) ராஜசேகர், மைக்ரோலெண்ட் தலைவர் மேலாண்மை இயக்குநர் கல்பனா கர், குன்னூர் வட்டாட்சியர் ஜவஹர் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.249 கோடியில் வளர்ச்சி பணிகள்: கலெக்டர் இரா.பிருந்தாதேவி தகவல்

சேலம், ஏப். 3–

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை கலெக்டர் இரா.பிருந்தாதேவி செய்தியாளர் பயணத்தின்போது நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்விற்குப்பின், கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 4 ஆண்டுகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், பள்ளிகள் உட்கட்டமைப்புத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கலைஞர் கனவு இல்லம், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ரூ.249.34 கோடி மதிப்பீட்டிலான 6,768 திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 4,836 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,932 பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளையும் தரமாகவும், உரிய கால அளவிலும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும், குடிநீர் தொடர்பான கோரிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துப் பணியாற்றிடவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் இரா. பிருந்தாதேவி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க் B2 பில்டிங், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014
கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 6 முதல் 10 வரை, 1வது தளம், ஸ்ரீ சாரா டவர்ஸ், டாக்டர் பாலசுந்தரம் சாலை, கோயம்புத்தூர் 641018
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விவரங்கள்: பெயர் : ரதீஷ் ராமச்சந்திரன்,
Email ID: Rathish.ramachandran@bajajhousing.co.in, Mob No. 8778385461 / 9940155459

பிற்சேர்க்கை IV A [விதி 8(6)] அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002 விதி 8(6)–ன்கீழ் இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக, கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாக தெரிவிப்பது யாதெனில், பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (ஈடுபெற்ற கடன் வழங்கியவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்ட, ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் பாக்கிகள், பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை மீட்டெடுப்பதற்காக "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில்" அசையா சொத்துக்கள் மின்னணு ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்கான செய்யப்பட உள்ளது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள் / உடன் கடன்தாரர்கள் விவரங்கள் மற்றும் கடன் கணக்கு விவரங்கள்	1. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் 2. EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி, 3. சொத்தை ஆய்வு செய்வதற்கான தேதி மற்றும் நேரம்	1. ரிசர்வ் விலை 2. சொத்துக்கான EMD 3. ஏல அதிகரிப்பு
கடன் எணக்கு என். 421HSLEU160467 and 421TSHEU273918 1.பிரியதர்ஷினி ஆர் (கடன்தாரர்) 2. ஆர் சுபாஷ் குமார் (உடன் கடன்தாரர்) இருவரது வசிப்பிடம்: 679 ராங்கே கவுட் தெரு கோயம்புத்தூர் – சென்னை மெயின்லைன் எதிரில், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641001 2. 20 மார்ச் 2025 அன்று மொத்த நிலுவைத் தொகை: ரூ.33,97,036/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து தொன்னூற்றேழாயிரத்து முப்பத்தாறு மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி மற்றும் சேர்த்துள்ள கட்டணங்கள்.	1. மின்னணு ஏலத் தேதி : 21 ஏப்ரல் 2025 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் 2. கேஒய்சி உடன் EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 19 ஏப்ரல் 2025 அன்று மாலை 5.00 மணி வரை (இந்திய நேரப்படி) 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி 03 ஏப்ரல் 2025 முதல் 19 ஏப்ரல் 2025 வரை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (இந்திய நேரப்படி)	1. ரிசர்வ் விலை : ரூ.28,00,000/- (ரூபாய் இருபத்தெட்டு லட்சம் மட்டும்) 2. EMD : ரூ.2,80,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்,) ரிசர்வ் விலையில் 10% 3. ஏல அதிகரிப்பு ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்

அசையா சொத்து குறித்த விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார் பதிவு மாவட்டம், அன்னூர் தாலுக்கா, கொண்டயம்பாளையம் கிராமம், எஸ். எப்.எண்.74–ல் உள்ள புஞ்சை ஹெக்டேர் 4.98.50, இதன் தற்போதைய உப பிரிவு எண்.74/1–ல் புஞ்சை ஹெக்டேர் 2.49.00, ஆர்எஸ்.10.37. இந்த நிலம் ஒரு லேஅவுட்டாக உருவாக்கப்பட்டு "ராயல் ரெசிடென்சி" என்று பெயரிடப்பட்டு வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுள்ளது. அதன் அங்கீகார எண்.LP/CLP.ANo.54/2017. மனை எண்.32 இதன் விஸ்தீரணம் : கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் : 41 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் 41 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கம் 16 அடி, வடக்கு தெற்காக மேற்குப் பக்கம் 16 அடி, மொத்த விஸ்தீரணம் 656 சதுர அடி அல்லது 1 செண்ட் 220 சதுர அடி நிலம் மற்றும் ஆர்சிசி தளம் போடப்பட்ட கட்டிடம் மற்றும் அங்கு பொருத்தப்பட்டுள்ள அனைத்து உபகரணங்களும் மற்றும் உள்ளே நுழைவதற்கும், வெளியே செல்வதற்கும் பயன்படுத்தும் லே அவுட் சாலை உரிமைகள் மற்றும் அனைத்து வசதிகளும் உட்பட மேற்கூறிய சொத்து கவுண்டம்பாளையம் கிராம பஞ்சாயத்தின் எல்லைக்குள் அமைந்துள்ளது, எல்லைகள் : வடக்கு: மனை எண்.31, தெற்கு : மனை எண்.33, கிழக்கு: மனை எண்.45, மேற்கு: 23 அடி வடக்கு தெற்காக சாலை.

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:
* பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்குத் தெரிந்து அல்லது தெரியாத அனைத்து தற்போதைய மற்றும் எதிர்காலச் வில்லங்கங்களுடன் இந்த சொத்து "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே எந்தவித மாற்றமும் இல்லாமல்" விற்கப்படுகிறது * குறைந்தபட்ச விலைக்கு கீழே பரிவர்த்தனைகள் செய்யப்படாது. * ஏல விற்பனை இணைய ஏல போர்ட்டல் மூலம் ஆன்லைனில் இருக்கும். 3. மின்னணு ஏலம் https://bankauctions.in/ 21 ஏப்ரல் 2025 அன்று காலை 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு வரம்புற்ற நீட்டிப்புடன் நடைபெறும்.* விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நிறுவனத்தின் இணையதள URL https://www.bajajhousingfinance.in/auction-noticesஐப் பார்க்கவும் அல்லது எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தேதி : 03/04/2025
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரதீஷ் ராமச்சந்திரன்,
பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : இந்தியன் ரயான் காம்பவுண்ட், வேரவல், குஜராத் 362 266.
கிளை அலுவலகம்: 12வது தளம், ஆர் டெக் பார்க், நிர்லான் காம்ப்ளக்ஸ், ஹப் மால் அருகில், கோரேகான் (கி), மும்பை 400 063, மகாராஷ்டிரா.

மின்–ஏல விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 9(1)ன் கீழ் அசையா சொத்துக்கள் மின்னணு ஏல விற்பனைக்கான 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / ஈடுபெற்ற கடன் வழங்கியவர், ஈடுபெற்ற கடனாளியின் ஈடுபெற்ற கடன்களை மீட்டெடுப்பதற்காக, 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் (SARFAESI) பிரிவு 13(2) இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகைகளுக்கு, பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களிடம் இருந்து கூடுதல் கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்காக, பின்வரும் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துள்ளார். ஆதித்யா பிர்லா பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன்களை அடைப்பதற்காக பின்வரும் சொத்து மின்னணு ஏலம் மூலம் "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே", "உள்ளது உள்ளபடி" மற்றும் "எந்தவித மாற்றமும் இல்லாத" என்ற அடிப்படையில் விற்பனை நடைபெறும் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுகிறது.

மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம்: 22.04.2025, காலை 11:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை
KYC & டேவணித் தொகை டெபாசிட் பெறப்படும் (EMD) : 21.04.2025

வ. எண்.	கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெயர்	சொத்துகள் / ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் மற்றும் சுவாதீனத் தேதி	ரிசர்வ் விலை (ரூ.)	டேவணித் தொகை டெபாசிட் (EMD) (ரூ.) / அதிகரிப்பு மதிப்பு (ரூ.)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் மொத்த தொகை (ரூ.)
1	1. M/S. சாய் கார்மென்ட்ஸ், சார்பாக (அதன் உரிமையாளர் திரு. சக்திவேல் மூலம்) 2. திரு. சக்திவேல் (க/பெ. திரு. கண்ணன்), 3. திரு. கண்ணன் (க/பெ.திரு. வேலுசாமி ஆர்), 4. திருமதி. வெள்ளையம்மாள் எம், கடன் கணக்கு எண்: ABCO\STS000000676166	திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை II சார் பதிவு மாவட்டம், திருப்பூர் வடக்கு தாலுகா, மாநகராட்சி, சாமுண்டிபுரம் ஏரியா, லட்சுமி தியேட்டர் சாலை, 15 வேலம்பாளையம் கிராமம், எஸ்.எப். எண். 463-ல் உள்ள 12.77 ஏக்கர், துணைப் பிரிவின்படி எஸ்.எப். எண். 463/1a1ல் உள்ள 1.65 ஏக்கர். இதில் ஒரு போர்வ்ஷன் 54.06 சென்ட் நிலம், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுவால் முறையாக அங்கீகரிக்கப்பட்டது, 19.09.2019 தேதியிட்ட கடிதம் எண். 533/2019, திட்ட ஒப்புதல் எண். 37/2019, Mv/Tnue எண். 36/2019, 'சக்திவேல் நகர்', மனை எண்.7ல் உள்ள நிலம் பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது: வடக்கு: 20 லிங்க் கிழக்கு மேற்காக பொதுவான பாதை, எஸ்.எப். எண். 463/1A1ல் உள்ளது, கிழக்கு: மனை எண். 6, தெற்கு: 9.0 மீட்டர் கிழக்கு மேற்காக தார் சாலை, மேற்கு: மனை எண். 8. இரண்டு சைடர்களில் கிழக்கு மேற்கு 29.6. விஸ்தீரணம் : கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 29.6 அடி, வடக்கு தெற்காக இரண்டு பக்கமும் 67 அடி, நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 1976 1/2 சதுர அடி நிலம், லேஅவுட் சாலைகள் மற்றும் பாதையின் உரிமைகளுடன். மேலே உள்ள சொத்து புதிய துணைப் பிரிவு எஸ்.எப். எண். 463/1A1B3, பட்டா எண். 7042ல் உள்ளது.	ரூ.53,10,000/- (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	ரூ. 5,31,000/- (ரூபாய் ஐந்து லட்சத்து முப்பத்தொராயிரம் மட்டும்) ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)	22.05.2024 மற்றும் 08.05.2024 அன்று ரூ. 34,80,396/- (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து எண்பத்தாயிரத்து முன்னூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்)

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஆதித்யா பிர்லா பைனான்ஸ் லிமிடெட் / ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் இணையதள இணைப்பைப் பார்க்கவும். www.adityabirlafinance.com மற்றும் https://BidDeal.in

தொடர்பு எண்கள்: ஆதித்யா பிர்லா பைனான்ஸ் லிமிடெட், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி 1) திரு. அபூர்வா தாமஸ் தந்தி : apoorva.danthi@adityabirlacapital.com, மொபைல் எண். 9930909725, நீங்கள் அருகிலுள்ள கிளைக்குச் செல்லலாம் அல்லது ஆதித்யா பிர்லா பைனான்ஸ் லிமிடெட்டைத் தொடர்பு கொள்ளலாம் 2) திரு. ஜாஹிருல் லஸ்கர் : (Jahirul.Laskar@adityabirlacapital.com) மொபைல் எண். +91 97060 03075, 3) பர்னீத் சிங் : (parneet.singh@adityabirlacapital.com) மொபைல் எண். +91 97200 29337, 4) திரு. ஸ்ரீகாந்த் : srikanth.s@adityabirlacapital.com மொபைல் எண். 98840 02027

இடம் : திருப்பூர், தமிழ்நாடு
தேதி : 03.04.2025

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட்

கோவை மாவட்டம், பந்தயசாலையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் உலக புறவுலக சிந்தனையற்றோர்க்கான (ஆட்டிசம்) விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு வாக்கத்தானை கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவர் தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சந்திரமோகன், ஜெயம் ஆட்டிசம் சென்டர் நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.